[30th March 1966

களில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் உயரிய சென்னைச் சம்பள விதங்கள் அகவிலைப்படி விதங்களில் சம்பளம் பெறுகின்றனர். அதாவது 1-6-1960-க்கு முன்னர் ரூ. 85—5—125—1-6-1960-லிருந்து ரூ. 140-5-10-250 என்கிற உயரிய சம்பள விதத்தில் 1-6-60-லிருருந்து ரூ. 140-5-10-250 என்கிற உயரிய சம்பள விதத்தில் சம்பளம் அளிக்கப்படுகிறது. தங்கள் பதவிகளில் 1-வது தரத்திற்கோ அல்லது இத்துறையில் ஏனைய யாதொரு பதவிக்கோ அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது பற்றி, மற்றவர்களுடன் அவர்களுடைய முறை வரும்பொழுது விதிகளுக்கிணங்க அதுகுறித்து யோசிக்கப்படும்.

(*a*) 247.

(*b*) Twenty-three persons have been promoted to higher categories.

(*c*) All the other allotted officers who were absorbed in the equated category of "Deputy Inspectors, School Assistants and Headmasters Grade II" continue to be in those categories. They have all been given the benefit of the increased Madras Scale of pay and rates of Dearness allowance (i.e.) Rs. 85–5–125–10–175 before 1st June 1960 and Rs. 140–5–180–10–250 from 1st June 1960. Their cases for promotion to Grade I in the category or to any other posts in the Service will be considered in their turn along with others in accordance with the rules.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

INVALIDATION OF THE MADRAS URBAN LAND TAX ACT BY THE HIGH COURT.

திரு. செ. மாதவன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர்ப்புற நிலவரிச் சட்டம் செல்லாது என்று அண்மையிலே உயர் நீதி மன்றத்தினால் தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டது. இப்படி தீர்ப்பளிக்கப்பட்டு சில நாட்கள் ஆகிவிட்டன. இதைப்பற்றி ஏதாவது அரசாங்கம் அறிவிக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். இதன் மூலம் கிட்டத்தட்ட ரூ. 45 லட்சம் வரி வசூலிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு கூறப் பட்டுவிட்டதால், இந்த ரூ. 45 லட்சத்தைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இது போன்ற நிலைமைகளில் ஏற்கனவே ஷுகர் கேன் செஸ் வாலிடேஷன் ஆக்ட் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இது போன்ற சூழ்நிலைகள் ஏற்பட்டன. அதே போன்று இந்தச் சட்டத்தின் கீழும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருக் கின்றன. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரு வதற்காக நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரபணையை கொண்டு வர விரும்புகிறேன்.

30th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டார்கள், இந்தச் சட்டம் இந்த மன்றத்தினால் இயற்றப்பட்டது என்றும், உயர் நீதி மன்றம் அண்மையில் அதில் ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறது என்றும், அதன் மீது உடனடியாக அரசாங்கம் ஏதோ செய்யவில்லை என்றோ அல்லது செய்ய வேண்டும் என்றோ விவாதிக்க இடம் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிலையில் இதற்கு மேல் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும், சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய, இடம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். ஹைகோர்ட்டார் தீர்ப்புக் கொடுத்தால், அதை ஏற்றுக் கொண்டு சட்டத்தை எப்படி மாற்றுவது என்பதையும் யோசிக்க வேண்டும். இதெல்லாம் ஒரு நாள், இரண்டு நாளில் முடிவு எடுக்கக் கூடியது அல்ல. சட்ட ஆலோசகர்களைக் கலந்து ஆலோசித்து, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி கவனம் செலுத்த வேண்டும். இதில் அரசாங்கத்தின் மீது புகார் சொல்ல ஒன்றும் இடம் இல்லை. இதில் விவாதிக்கவும் ஒன்றும் இல்லை. ஆகவே, இது ஒத்திவைப்பு பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவிக்கிறேன்.

MR. SPEAKER : Consent is withheld.

III—CALLING ATTENTION TO CLOSURE OF INDUSTRIES DUE TO SHORTAGE OF ELECTRICITY.

SRI M. KALYANASUNDARAM : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, partial closure of industries and dislocation in the State due to shortage of electricity. I request the Hon. Minister to make a statement.

* THE HON. SRI R. VENKATARAMAN : Owing to the thorough failure of the South West Monsoon in 1965, the hydel storages in the State were not filled up last year and they had only about 15 per cent of the full reservoir conditions by the middle of October 1965. It was found that this storage, would not be enough to meet the requirements of power till the onset of the next South West Monsoon. In order to conserve power, a conference of the industrialists of the State was held on 18th October to discuss the situation. It was decided to impose a cut on the power consumption of all industries except certain essential industries, with effect from 1st November 1965. In the case of H.T. Industrial Consumers, a cut of 25 per cent of the energy consumed was imposed. The cut in the Madras Thermal area was restricted to 20 per cent. In the case of low tension supply the cut was fixed at 25 per cent both in the hydel and thermal areas. Industries having their own generators were allowed to use them and the power so produced was exempted from consumption tax.